ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2005/15 - 2017 පෙබරවාරි 08 වැනි බදාදා - 2017.02.08
*2005/15 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 4-3/5/2016/எச்/471.
பிர. செ. குறிப்பு இல. : என்/டீஎஸ்/எல்/பீஎச்என்ரீஆர்/2016.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் ஜோன் என்தனீ எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜோன் ஏ. ஈ. அமரதுங்க,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017.01.30.

அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், நிந்தவூர்.

2. **காணியின் விபரம்** : கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில், நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவில், நிந்தவூர் பத்துவை சிறு பிரிவில் நிந்தவூர் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட 2016.11.08 ஆந் திகதிய ஏஎம்/என்ஐஎன்/2016/358 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட சுமார் 2.2150 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' - கொக்கடி இலவசம் - விஸ்தீரணம் : சுமார் 0.1911 ஹெக்டயார்**
வடக்கு : அபூபக்கர் மரைக்கார் மற்றும் ஏ. எல். சாபிர் ஆகியோர் உரிமை கோரும் கொக்கடி இலவசம் ; கிழக்கு : வீதி (வீ.அ.அ.) ; தெற்கு : துண்டுகள் பீ மற்றும் டீ ; மேற்கு : எம். எச். எம். யக்குபி ஹசன் உரிமை கோரும் கொக்கடி இலவசம்.

02. **துண்டு 'பீ' - கொக்கடி இலவசம் - விஸ்தீரணம் : சுமார் 1.2145 ஹெக்டயார்ஸ்**
வடக்கு : துண்டு ஏ ; கிழக்கு : வீதி (வீ.அ.அ.) ; தெற்கு : எஸ். எம். புஹாரி, எம். எல். அச்சி முகமட் மற்றும் எம். என். நகூர் உரிமை கோரும் கொக்கடி இலவசம் ; மேற்கு : அச்சி முகமட், எம். என். நகூர் உரிமை கோரும் கொக்கடி இலவசம் மற்றும் துண்டு டீ.

03. **துண்டு 'டீ' - கொக்கடி இலவசம் - விஸ்தீரணம் : சுமார் 0.8094 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு ஏ ; கிழக்கு : துண்டு பீ ; தெற்கு : எம். எல். அச்சி முகமட், எம். என். நகூர், எச். எம். கபீர் மற்றும் அவரின் மனைவி உரிமை கோரும் கொக்கடி இலவசம் ; மேற்கு : எம். எச். எம். யக்குபி ஹசன் உரிமை கோரும் கொக்கடி இலவசம்.

*02 - 853*